அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல:11/2000

எனது இலக்கம்:ஆ/1/4/4(I)
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
2000, ஜூலை மாதம் 14 ஆந் திகதி.

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாணசபை பிரதான செயலாளர்கள்,
மற்றும் திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

**அரச உத்தியோகத்தர்களுக்கான இடைக்கால படியொன்றை வழங்குதல்.**

12,000/- ரூபா அல்லது அதற்கு குறைந்த மாதாந்த சம்பளத்தைப் பெறும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மாதத்திற்கு 600/- ரூபாவான இடைக்கால படியொன்றை 2000.08.01 ஆம் திகதியிலிருந்து வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

02. 12,001/- ரூபாவிலிருந்து 12,599/- ரூபா வரையிலான சம்பளத்தை பெறும் உத்தியோகத்தர்களுக்கு, இந்தப் படியுடன் அவர்களது சம்பளம் 12,600/- ரூபாவாக அமையும் எண்ணம், குறைந்து செல்லும் விகிதியை அடிப்படையாகக் கொண்டு இந்த இடைக்கால கொடுப்பனவை சீராக்குதல் வேண்டும்.

03. 2000.08.01 ஆம் திகதியின் பின்பு வேதன ஏற்றங்களுக்கு அமைய சம்பளம் 12,001/- ரூபாவிலிருந்து 12,599/- ரூபாவாகும் போது மேலே II ஆவது பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு செயற்படுதல் வேண்டும்.

04. நாள் சம்பளம் பெறுபவர்களுக்கு இக் கொடுப்பனவை வழங்கும் போது வேலை செய்யும் முழு நாளொன்றுக்கு ரூபா.28.57 சதவீதம், பஞ்சாங்க மாதத்தில் 21 நாட்களுக்கு உச்ச வரம்பின் கீழ் கணக்கிடுதல் வேண்டும்.

05. இவ் இடைக்கால படி ஓய்வூதிய சம்பளமற்றது.

06. பொது திறைசேரியின் இணக்கத்துடன் இச் சுற்றுநிருபம் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: மஹிந்த பந்துசேன
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
அமைச்சின் செயலாளர்.